(அ) மேஜர் பஞ்சாயத்துக்களுக்கு மக்கள் தொகை எவ்வளவு இருக்க வேண்டும்? வருவாய் எவ்வளவு இருக்க வேண்டும்?

(இ) மைனர் பஞ்சாயத்துக்களுக்கு குறை அளவு, அதிக அளவு மக்கள் தொகை எவ்வளவு இருக்க வேண்டும்?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** (அ) & (இ) மக்கட் தொகை ஐயாயிரத்துக்குக் குறையாமலும் ஆண்டு வருமானம் பத்தாயிரம் ரூபாய்க்குக் குறையாமலும் இருக்குமிடங்களில் பேரூராட்சிகள் நிறுவப்படும். ஏனைய இடங்களில் மக்கட்தொகை ஐந்நூறுக்குக் குறையாமல் இருந்தால் ஊராட்சிகள் ஏற்படுத்தப் படும். ஊராட்சிகளில் அதிக அளவு மக்கட் தொகை எவ்வளவு இருக்க வேண்டும் என்று 1958 தமிழ்நாடு ஊராட்சிச் சட்டத்தில் வரையறுக்கப்படவில்லை.

*30 வினா.—திரு. வை. சுவாமிநாதன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1967-ம் ஆண்டில் தமிழ் நாட்டில் எத்தனை கிராமப் பஞ்சாயத்துக்கள் மேஜர் பஞ்சாயத்துக்களாக மாற்றப் பட்டுள்ளன?

(இ) எத்தனை நகரப் பஞ்சாயத்துக்கள் முனிசிபாலிடிகளாக மாற்றப்பட்டுள்ளன?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** (அ) 48 பேரூராட்சிகள்.

(இ) ஒன்றும் இல்லை.

**திரு. கொளத்தூர் கோதண்டம்:** தலைவர் அவர்களே, குறிப் பிட்ட மக்கள் தொகைக்கு மேலாக இருக்கும் மைனர் ஊராட்சி மன்றங்கள் பிரிந்து செல்லவேண்டும் என்ற கோரிக்கைகள் விடப் பட்டும், இன்னும் பல பிரித்துத் தரப்படவில்லை. அதன்பேரில் சர்க்கார் உடனடியாக நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** அதுபற்றிய விவரம் இல்லை. தனிக் கேள்வி போட்டால் விவரம் அளிக்கலாம்.

**திரு. வை. சுவாமிநாதன்:** தலைவர் அவர்களே, 1958-ம் ஆண்டு பஞ்சாயத்து சட்டத்தில் சில குறைபாடுகள் இருக்கின்றன. அவற்றையெல்லாம் திருத்தி, விரிவான மசோதா கொண்டுவரும் உத்தேசம் அரசாங்கத்திற்கு உண்டா?

**மாண்புமிகு திரு. மா. முத்துசாமி:** பஞ்சாயத்து சட்டங்களைத் திருத்தவேண்டும் என்ற ஒரு எண்ணம் அரசுக்கு இருக்கிறது.

**திரு. இரா. மாணிக்கவாசகம்:** போதைத் தலைவர் அவர்களே, மேஜர் பஞ்சாயத்தினுடைய வருமானம் பத்தாயிரம் ரூபாய் என்று வரையறை குறிப்பிடப்பட்டுள்ளது. இன்றுள்ள நிலைக்கு ஏற்றாற்போல், இருபதாயிரம் ரூபாய் என்று உயர்த்தி நிர்ணயிக்க அரசு முன்வருமா?

1969 பிப்ரவரி 25]

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : பஞ்சாயத்து சட்டங்களைத் திருத்த முற்படுகிறபோது அங்கத்தினருடைய கருத்தும் கவனத்தில் கொள்ளப்படும்.

திரு. க. இராமமூர்த்தி : தலைவர் அவர்களே, இந்த மைனர் பஞ்சாயத்துக்களில் 500-க்கும் அதிகமாக, ஆயிரம் மக்கள் தொகையுள்ள இரண்டு மூன்று கிராமங்களைச் சேர்த்து ஒரு பஞ்சாயத்தாக அமைக்கிற சூழ்நிலை இப்பொழுது இருந்துகொண்டு இருக்கிறது. அந்தப் பஞ்சாயத்துக்கள் தனியாகப் பிரிக்கப்படவேண்டும் என்றால், ஒரு கிராமம் 500 மக்கள் தொகை கொண்டிருந்து, அது தனிப் பஞ்சாயத்தாகப் பிரித்து அமைக்கப்படவேண்டுமானால், அந்தப் பஞ்சாயத்து ஒரு தீர்மானம் நிறைவேற்ற வேண்டும். அடுத்து, பஞ்சாயத்துப் பெருமன்றம் ஒரு தீர்மானம் நிறைவேற்ற வேண்டும். அதிலே அவர்கள் செல்வாக்கு பயன்படுகிற காரணத்தால் சில சிறிய ஊர்கள், 500 மக்கள் தொகை இருந்துங்கூட, பிரிந்து போக முடியாத நிலை இருக்கிறது. இதைத் தவிர்க்க அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : ஊராட்சி மன்றங்கள், ஊராட்சி ஒன்றியங்கள் தனித்தனியாகத் தீர்மானங்கள் நிறைவேற்றித் தரவேண்டும் என்றாலும் பல நேரங்களில் அவைகள் அப்படிப்பட்ட தீர்மானத்தை நிறைவேற்ற மறுத்தால் பிரிக்கப்பட வேண்டியது நியாயம் என்று அரசாங்கத்திற்குப் பட்டால் அவைகளை மறுச்சுத்துக்கூட முடிவுகள் மேற்கொள்ள உரிமை பெற்றிருக்கிறது.

திரு. செஞ்சி. வெ. முனுசாமி : பேரூராட்சியை நிர்வகிக்க நிர்வாக அதிகாரிகள் இருக்கிறார்கள். அதேபோன்று கிராம ஊராட்சி அலுவல்கள் ஒழுங்காக நடைபெறுவதற்கும், கூட்டங்கள் நடைபெறுவதற்கும் உறுதுணையாக இருக்க, இரண்டு, மூன்று ஊராட்சி மன்றங்களுக்குச் சேர்ந்தாவது ஒரு நிர்வாக அதிகாரியை நியமிக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: இது ஒரு நல்ல யோசனை.

திரு. கே. போஜன் : தலைவர் அவர்களே, மைனர் பஞ்சாயத்து அமைப்பதற்கு மக்கள் தொகை 500 இருந்தால் போதும் என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். மக்கள் தொகை 500 மாத்திரம் இருந்தால் போதுமா? மைனர் பஞ்சாயத்துக்கு ஒரு குறிப்பிட்ட வருவாய் வேண்டும் என்ற நிலை இருக்கிறதா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : 500-க்கு மேற்பட்ட மக்கட் தொகை இருக்கவேண்டும் என்று, மேல்வரம்பு எவ்வளவு என்று நிர்ணயிக்கப்படவில்லை. வருமானத்தைப்பற்றிய விதிமுறை எதுவும் இதிலே வகுக்கப்படவில்லை.

திரு. நா. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, ஊராட்சி மன்றங்கள் பேரூராட்சி மன்றங்களாக மாற வேண்டுமானால் அதற்கு மக்கள் தொகை ஐயாயிரமும், வருமானம் பத்தாயிரமும்

[1969 பிப்ரவரி 25

இருக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் கூறினார்கள். அப்படி மக்கள் தொகை ஐயாயிரமும், வருமானம் பத்தாயிரமும் இருந்தால் ஊராட்சி மன்றங்களை பேரூராட்சி மன்றமாக மாற்றுவதற்கு ஊராட்சிகளே தீர்மானம் போட்டு நிறைவேற்ற வேண்டுமா? அல்லது அரசாங்கமே நேரடியாக அதை பேரூராட்சி மன்றமாக மாற்றி அறிவிக்குமா என்பதை அறிய வேண்டுகிறேன்.

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: அரசாங்கமே பரிசீலனை செய்து தேவையான முடிவுகளை அறிவிக்கும்.

பதநீர் இறக்க உரிமம்

*51 வினா.—திரு. கொளத்தூர் கோதண்டம்: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

பதநீர் இறக்குவதற்கான லைசென்ஸ் வழங்கும் முறையை அறவே நீக்கிவிட வேண்டுமெனக் கோரி சட்டப்பேரவை உறுப்பினர்களிடமிருந்து விண்ணப்பம் ஏதேனும் வந்துள்ளதா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: ஆம்.

*52 வினா.—திரு. கொளத்தூர் கோதண்டம்: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை மாநில பனைவெல்ல கூட்டுறவு சம்மேளனத்திலிருந்து பதநீர் இறக்குவதற்கான லைசென்ஸ் முறையை மாற்றியமைக்க வேண்டுமென்ற கோரிக்கை ஏதேனும் அண்மையில் வந்துள்ளதா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: ஆம்.

திரு. கொளத்தூர் கோதண்டம்: தலைவர் அவர்களே, அதன் பேரில் எடுக்கப்பட்டிருக்கிற நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, இப்பொழுது உள்ள உரிமம் வழங்கும் முறையையே தொடர்ந்து கடைப்பிடிப்பது என்ற நிலையைத்தான் அரசாங்கம் எடுத்திருக்கிறது.

திரு. ரா. ராமச்சந்திரன் துரை: தலைவர் அவர்களே, பதநீர் இறக்குவதாகச் சொல்லி பனங் கள் இறக்குவது ஒன்று. அப்படி பதனீர் இறக்கியபிறகு நான்கு ஐந்து மணி நேரம் கழித்த பிறகு அது புளிப்பாகி விடுகிறது. அதைக் குடித்து வருகிற அப்பாவிகள் 4-எ செக்ஷன்படி, அதிக குடிபோதை என்கிற விதியின் படி அபராதம் கட்டுகிறார்கள்.

---

திரு. ரா. ராமச்சந்திர துரை: குறைந்த குடிபோதைக்கு (not under the influence) 4-1(ஜெ) செக்ஷன்படி ஜெயில் தண்டனை கொடுக்கிறார்கள். ஆகவே, இதை மாற்றியமைக்கும் பரிசீலனை அரசாங்கத்திற்கு உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.